**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பத்தூர்**

**O.S.No.127/2021**

பி.வா.சா.2. திருமதி.சித்ரா நாள்– 11.02.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் எனது வழக்கறிஞர் சொன்னதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பொது வழியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் மகிமைநாதன், கமலநாதன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி மகிமைநாதன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது கணவர். 1ம் பிரதிவாதி சொன்னதன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் அவரும் சொன்னார். வழக்கறிஞரும் சொன்னார். நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் என்ன என்றால் 8/7. அதன் விஸ்திரணம் எவ்வளவு என்றால் சரியாக நியாபகம் இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சரியாக நியாபகம் இல்லை. எனது வீட்டிற்கு மேற்கு புறம் தார் சாலை உள்ளது என்றால் சரிதான். தெற்கு புறம் தெரு உள்ளது என்றால் சரியல்ல. எனது வீடு உள்ளது.

2. எனது வீட்டிற்கு அருகில் என்ன இருக்கிறது என்றால் கழிவுநீர் கால்வாய் உள்ளது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது வீட்டிற்கு அருகில் பொது மக்கள் பயன்படுத்தும் தெரு உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அரசு சார்பிலும், முனிசிபாலிட்டியிலும் தரப்பிலும் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் சரியாக நியாபகம் இல்லை. நீதிமன்றத்தில் மூலமாக ஆணையர் மற்றும் நில அளவையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட வந்தார்கள் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் உள்ள சங்கதிகளை எனது கணவரிடம் இருந்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்கறிஞர் ஆணையர் 1.3 மீட்டர் அகலமும், 11.2 மீட்டர்

நீளமும் ஆக மொத்தம் 14.56 சதுர மீட்டர் ஆக்கிரமிப்பு உறுதி செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. ஆணையர் அறிக்கை படி நாங்கள் ஆக்கிரமிப்பு பகுதி 14.56 சதுர மீட்டர் பரப்பபை நாங்கள் காலி செய்யாமல் இருக்கிறோம் என்றால் நீதிமன்றத்தில் அதுகுறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்பதால் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை நான் குடியிருக்கும் வீடு எப்போது கட்டப்பட்டதுஎன்றால் 1956. அந்த கால கட்டத்தில் திருமணம் நடைபெற்றதிருந்ததா என்றால் இல்லை. செங்கல் சுவர் எழுப்பிய கட்டடத்தை 2021ல் கட்டினோம் என்றால் சரிதான். மேற்படி சுவரை எழுப்பும் போது தான் வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் வாதிகள் தான் பிரச்சனை செய்தார்கள். தெற்கு புறம் பொது வழியில் தான் வாதிகள் கடந்து செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. தெருவை ஒட்டி தான் 150 வருட பழமையான கிணறு, குடிநீர் குழாய் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தெரு இல்லை. 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டியதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நாங்கள் உண்மையிலேயே 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டியிருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்போம், அவ்வாறு தாக்கல் செய்யாததால் 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் வீடு கட்டவில்லை என்று சொன்னால் வழக்கறிஞரிடம் ஆவணங்கள் கொடுத்துள்ளோம்.

4. நாங்கள் எழுப்பிய சுவரின் அகலமானது 6 அடி, 35 1/2 நீளத்திற்கு, 7 அடி உயரம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் வீடு கட்டுவதற்கு முன்பே அந்த வழியானது பொது வழியாக பொது மக்கள் பயன்பாட்டில் இருந்தது என்றும் 2021ல் வழியை மறைத்து சுவர் கட்டியதால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பொது வழியை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டிடமானது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. வழக்கின் 2ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது மைத்துனர். 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் பதிலுரையை தாக்கல் செய்துள்ளரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் சாட்சி அளித்துள்ளாரா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார்எ ன்றால் எங்கள் வீட்டில் தான் இருக்கிறார். வழக்கின் முழுமையான விவரங்கள் தெரியாத நிலையில் 1ம் பிரதிவாதி எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

J PAVITHRA
Principal District Munsif
Location: Tirupathur